பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஸூ ஆடி மீ 21 உ திங்கட்கிழமை (06-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 12 கதிர்: 156



கடந்த வியாழன் யாழ்ப்பாணத்தில் சீனத் தயாரிப்பான — 4 இயந்திரங்களைக் கொண்ட — பெரிய விமானத்திலிருந்து வீசப்பட்ட ராட்சதக் குண்டுகளினால் குருநகர், யாழ். சிவன்கோவிலடிப் பகுதிகளில் பல வீடுகள், கட்டடங்கள் தகர்ந்தன. அக் கட்டடங்களில் சிலவற்றை மேலே காணலாம்.

# யாழ். கோட்டை தாக்குதலில் 27 வேங்கைகள் வீரமரணம்

## இராணுவத்தினருக்கும் பேரிழப்பு?

யாழ்ப்பாணம், ஆக. 6

யாழ்ப்பாணம் கோட்டை முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை முதல் நடத்திய பெரும் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 27 பேர் வீர மரணம் அடைந்தனர்.

கோட்டைக்குள் இருந்த படையினருக்கும் பேரிழப்பு ஏற்பட்டு இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

யாழ். கோட்டைமுகாம்மீது நேற்று அதிகாலை 12 30 மணியளவில் விடுதலைப் புலிகள் பெரும்தாக்குதலைத் தொடுத்தனர்.

இந்தத் தாக்குதல் நேற்று அதிகாலை நான்கு மணி வரை நீடித்தது.

கோட்டையிலிருந்த படையினரைப் பாதுகாப்பதற்காக யாழ். நகரின் மீது வந்து வட்டமிட்ட பொம்மர்கள், அவ்ரோ விமானங்கள் மற்றும்ஹெலிக்கொப்டர்கள்யாழ். கோட்டையைச் சூழவுள்ள நகரப் பகுதி மீது கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ● மரணித்த போராளிகள்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 6

கடந்த 320 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழ் மண்ணை ஆக்கிரமித்தவர்களின் நிலைகளமாக விளங்கி வரும் யாழ். கோட்டையை அழிக்கவும்-

அங்குள்ள சிங்கள ஏகாதிபத்திய படைகளை விரட்டியடித்து எமது சுதந்திரத்தை மீட்கவும் என நேற்று புகுந்த ஒரு களத்தில் நான்கு பெண் போராளிகள் உட்பட 27 வீர வேங்கைகள் மரணித்தனர்

-இவ்வாறு விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது

வீரமரணம் அடைந்த போராளிகளின் விவரம் வரு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பூதவுடல்களுக்கு இன்று மானிப்பாயில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 6

யாழ். கோட்டை முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த 27 போராளிகளின் பூதவுடல்களும் இன்று காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக மானிப்பாயில் இந்துக் கல்லூரியில் வைக்கப்பட்டிருக்கும்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத் தகவலை தெரிவித்தன.

பின்னர் அங்கு மக்கள் முன்னணி பிரமுகர்களின் அஞ்சலி உரையைத் தொடர்ந்து பூதவுடல்கள் அடங்கிய பேழைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மானிப்பாயில் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-9-5)

## பாஷையூர் அகதி முகாமில் பொம்மர் தாக்கி 5 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஆக.6

அகதிகள் தங்கி இருந்த பாடசாலை மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் நான்கு சிறுவர்கள் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர். பத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று ஞாயிறு காலை 8-30 மணியளவில் பாஷையூர் புனித மகளிர் வித்தியாலயத்தில் இடம்பெற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியூஸ் வீதியில் பெண்பலி

யாழ்ப்பாணம், ஆக. 6

சனி நள்ளிரவு யாழ். நகரில் இடம் பெற்ற விமானத்தாக்குதல்களில் யாழ்-மத்தியூஸ் வீதியில் பெண் ஒருவரும் மரணமானார்.

மரணமானவர் யோசப் பிலோமினா (வயது 54) இவரது வீடும் சேதமடைந்தது.

[இ-51-10]

## நகைக் கடைகள் சேதம்

சனிக்கிழமை நள்ளிரவு முதல் ஞாயிறு காலை வரை யாழ் நகரில் இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதல்களினால் கன்னாதிட்டிப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட நகைக்கடைகள் சேதமடைந்தன.

## சர்வதேச செஞ்சிலுவை அலுவலகமும் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 6

சனிக்கிழமை நள்ளிரவு முதல் ஞாயிறு காலைவரை யாழ். நகரில் இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதலினால் பலாலி வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அலுவலகம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் ஆகியன சிறிது சேதமடைந்தன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தின் கூரை, யன்னல், கதவுகள், கண்ணாடிகள் மின்விளக்குகள், ஆகியன நொருங்கிச் சிதறிக் காணப்பட்டன.

சம்பவம் நடந்த போது சர்வதேசசெஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் இருவர் அங்கே இருந்தனர்.

[இ-5-113]

## வாசகர்களுக்கு!

நேற்று நகரில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இன்றைய உதயன் 4 பக்கங்களுடன் மட்டுமே வெளிவருகின்றது. நிலைமை இன்று சீரானால் நாளை முதல் உதயன் வழமைபோல் ஆறு பக்கங்களில் வெளிவரும்.

- நிர்வாகத்தினர்.

## ஓமந்தை தாக்குதலில் பத்து இராணுவத்தினர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 6

வவுனியா மாமடு முகாமிலிருந்து வெளியேறி ஓமந்தைக் காட்டில் நிலை கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 10 இராணுவத்தினர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

[ 3ஆம் பக்கம் பார்க்க]

## பொம்மர் தாக்குதல்கள் நேற்றிரவும் தொடர்ந்தன

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 6

யாழ் நகரப்பகுதியில் பொமமர் மற்றும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் நேற்றிரவும் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

நேற்றுமாலை 5. 15 மணி முதல் மீண்டும் அடிக்கடி நகருக்கு மேல் வந்து வட்டமிட்டுச் சென்ற பொம்மர்கள் அவ்வப்போது நகரின் மீது குண்டுகளைப் பொழிந்து சென்றன.

ஹெலிக்கொப்டர்களும் வேட்டுக்களைத் தீர்த்தன. இரவுத் தாக்குதலினால் ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியைவிட்டு வெளியேறும்போது படை கேந்திரப்பகுதிகளை தீயிட்டுக் கொளுத்தியது!

கிளிநொச்சி, ஆக. 6

கிளிநொச்சியிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் நகரைத் தீயிட்டுக் கொளுத்தி அழித்து விட்டே அங்கிருந்து சென்றிருக்கிறார்கள்.

கரடிப்போக்கு சந்தியில் இருந்து டிப்போசந்தி வரையிலான பகுதியும், கணேசபுரம் செட்டித்தெரு பகுதியும் பரவிப்பாஞ்சான் பகுதியும் முற்றாகஅழிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் வியாபார மையமாகவும், நிர்வாக மையமாகவும் காணப்படும் இந்தப்பகுதியை அழித்ததன் மூலம் கிளிநொச்சியின் முக்கிய பகுதி திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்கிறது.

நகரில் காணப்பட்ட வர்த்தக நிலையங்கள், வீடுகள் யாவும் தீயிட்டு முற்றாக எரிக்கப்பட்டு உள்ளன.

ஒரு சில கடைகள் தீயிட்டும் தெய்வாதீனமாக எரியாமல் தப்பி உள்ளன.

அரச அலுவலகங்களிலும் விமானத் தாக்குதலினால் முற்றாக தரைமட்டமாக்கப்பட்ட கட்டடங்களை தவிர்ந்த எஞ்சிய கட்டடங்கள் அனைத்தும்தீயிட்டுக்கொழுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் இருந்த தியேட்டர்கள் இரண்டும் விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்துள்ளன.

நகரத்தில் இப்போது விமானக் குண்டு வீச்சினால் இடிந்து கிடக்கும் கட்டடங்களும் தீயிட்டு கொழுத்தப்பட்ட பின்னர் புகை படிந்த நிலையில் கிடக்கும் குட்டிச் சுவர்களே காணப்படுகின்றன.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையும், நூல்நிலையமும் அவற்றினுள் இருந்த முக்கிய ஆவணங்கள் மற்றும் புத்தகங்களுடன் சேர்த்து எரிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் கலை கலாசார பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டு, பரவிப் பாஞ்சானில் இயங்கி வந்த கிளிநொச்சி கவின்கலைக் கல்லூரிவிமானத்தாக்குதலினால் முற்றாக தகர்க்கப்பட்டது,

கரடிப்போக்குச் சந்தியில் உள்ள கிளிநொச்சி தேசிய சேமிப்பு வங்கி விமானக் குண்டு தாக்குதலில் தரைமட்டமானது.

ஆனால் வங்கி, வாடிக்கையாளரின் தஸ்தாவேஜுகள் சேதமடையாமல் பாதுகாக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

கிளிநொச்சி மாவட்டத்துக்கான மின்சார விநியோகம் கடந்தமாதம் 20 ஆம்திகதி முதல் முற்றாகத் தடைப்பட்டிருக்கிறது. [உ-76]

## சின்னஞ் சிறு விளம்பரம்

**Typewriters**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay. (சி-5289)

**கிளீன் கட்**

யாழ். மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த கிளீன் கட் ஸ்தாபனம், பிறவுண் வீதியில் 37, சிவகுருநாதன் வீதி (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்) தற்போது இயங்கி வருகிறது. (C/5291)

## கொடும்பாவி எரிப்பு

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் கொடும்பாவி ஒன்று கடந்த புதனன்று இரவு ஒன்பதரை மணியளவில் மட்டுவில் சுடலையில் வைத்து இப்பகுதி பொதுமக்களினால் எரிக்கப்பட்டது. [உ-31]

## எமது மண்ணை மீட்க நாமே பாடுபடவேண்டும்

### கோப்பாய் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 6

எமது மண்ணை மீட்க நாமே பாடுபடவேண்டும். இதற்கு உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பு மிக அவசியம்.

கோப்பாய் வடக்கு சரவணபவானந்தாவித்தியாலயத்தில் நடைபெற்ற ''தமிழீழ மீட்பு நிதி'' கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மககள் முன்னணி உறுப்பினர் தேவர் அண்ணா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது இன்று யாழ். குடா நாட்டில் ஏறக்குறைய பத்து இலட்சம் மக்கள் இருப்பதாக புள்ளி விவரம் கூறுகின்றது. இதில் இரண்டு லட்சம் பேர் இளைஞர்கள். ஆனால் கோட்டை முகாம் முன்பும், வயாவிளான் முகாம் முன்பும் இராணுவத்தை வெளியேற விடாது தாக்குதலில் ஈடுபட்டு கொண்டிருப்பவர்கள் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

எனவே இளைஞர்கள் எம்முடன் போராட்டத்தில் இணையவேண்டும் என்றார். (இ-72)

## காயமடைந்த போராளிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஆக. 6

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் காயமடைந்த போராளிகளுக்கு ''தென்றல்'' குழுவினர் தலையணைகள். உடைகள், உணவுப் பொருட்கள் என்பவற்றை வழங்கினார்கள்.

விடுதலைப் புலிகளின் மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சங்கரிடம் ''தென்றல்'' குழுவினர் கடந்த வியாழக்கிழமை இவற்றை கையளித்தனர்.

இந்த ஆஸ்பத்திரியில் உள்ள காயமடைந்த போராளிகளை இரவில் ''தென்றல்'' குழுவினர் பராமரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## விசேட அதிகாரி

வவுனியா மாவட்டத்தில் அகதிகள் நலன் பேணுதல், மீளக்குடியமர்த்தல் ஆகிய பணிகளைக் கவனிக்க விசேட இணைப்பு அதிகாரி ஒருவரை அரசாங்கம்நியமித்துஉள்ளது.

வவுனியா மாவட்ட எம்.பியும் கல்வித் துணை அமைச்சருமான ராஜமனோகரி புலேந்திரனின் கோரிக்கை மீது அரசு இந்த நியமனத்தைச் செய்திருப்பதாகவும்–

அரச அதிகாரிகளுக்கு மேலாக இந்த இணைப்பு அதிகாரி செயற்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## வெளி மாவட்ட குடும்பங்கள்

மட்டுவில் மகா வித்தியாலயத்தில் உள்ள வெளி மாவட்ட அகதிகளுக்கான முகாமில் 107 குடும்பங்கள் தங்கி உள்ளன. தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழக அனுசரணையுடன் மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் இதனைப் பொறுப்பேற்று நடாத்துகின்றனர். (இ-31)

## லக்ஸபான மின்சாரம் உடனடியாகசாத்தியமில்லை?

யாழ்ப்பாணம், ஆக. 6

யாழ். மாவட்டத்துக்கு லக்ஸபான மின்சாரம் உடனடியாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று அறியப்படுகிறது.

கிளிநொச்சியில் சேதமடைந்த மின்சார கேபிள்களைத்திருத்துவதற்கு, அதில் ஈடுபடும் ஊழியருக்கான பாதுகாப்பு உத்தரவாதம் இதுவரை கிடைக்கவில்லை.

இது குறித்து கொழும்பில் மின்சாரசபை தலைமையகத்துடன் இங்கிருந்து தொடர்பு கொள்ளப்பட்டது, தலைமையக அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சுடன் பேசி முடிவு தெரிவிப்பதாகக் கூறினார்கள்—

தொலைபேசி வசதி எதுவும் இல்லாததால், நல்லூரில் உள்ள ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தினூடாகவே கொழும்புத் தலைமையக அதிகாரிகள் பதில் தருவார்கள்—

அவர்களின் பதிலை எதிர்பார்த்து தினமும் ஐ. நா. அ. ஸ். அலுவலகம் சென்று வருகிறோம். நேற்றுவரை பதில் கிடைக்கவில்லை --

செவ்வாய்க்கிழமை வரை விடுமுறை. அதன் பின் ஊழியரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தந்து அனுமதி தந்தாலும் முதலில் ஒரு குழு சென்று திருத்த வேலைகள் குறித்து மதிப்பீடு செய்து வரும். அதன் பின்னரே திருத்த வேலைகளை மேற்கொள்ளும் குழு கிளிநொச்சி செல்லும் -- என்று மின்சாரசபை உயரதிகாரி ஒருவர் நிலைமையை விளக்கினார்.

## தமிழ்பேசும் மாணவரின் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 6

தமிழ்பேசும் மாணவர் ஒன்றியத்தின் தீவுப்பகுதி, தென்மராட்சி பிரதேசங்களின் பொதுக்கூட்டங்கள் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

தீவுப்பகுதி பிரதேசக் கூட்டம் வேலணை மத்திய கல்லூரியிலும், தென்மராட்சிப் பிரதேசக் கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நடைபெறும். [உ-9]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா துரைராஜசிங்கம்**

(இளைப்பாறிய ஆசிரியர்)

மலர்வு: 18 - 11 - 1920 உதிர்வு: 06 - 08 - 1988

திதி: 14 — 08 — 1990

எம்முயிர் எம்மை விட்டுப் போகும் வரை எம் நெஞ்சில் இருந்து உங்கள் நினைவு போகாது. எம் முன்னே நீங்கள் என்றும் நடமாடும் தெய்வமய்யா. என்று நீங்கள் மீள வந்து எம் துயரைத் தீர்ப்பாயோ அன்றுவரை எமக்கு ஆறாத்துயரமய்யா.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஸ்ரேஷன் றோட்,
தெல்லிப்பழை. [13611]

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

### நிர்வாகசபைக் கூட்டம்

இடம் : ''யூனிவேர்சல்'', கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

காலம்: 7-8-90 (செவ்வாய்) காலை 10 மணி

நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

### பொதுச்சபைக் கூட்டம்

இடம் : யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை (யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அருகாமையில்)

காலம்: 9-8-90 (வியாழன்) காலை 10 மணி

பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

செயலாளர்

[13613]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் நா. வேலுப்பிள்ளை**

தோற்றம்: 14 - 04 - 1916 மறைவு: 07 - 07 - 1990

ஆனித்திங்கள் 23ஆம் நாள் 07-07-90 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது தந்தையாரின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் 06-08-90 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் சமுகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

A. G. A. காரியாலய வீதி,
தெல்லிப்பழை. [13614]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## காத்தான்குடிக் கொலைகள்

காத்தான்குடியில் 150க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தமது வணக்க ஸ்தலங்களில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த வேளை ஆயுதக் கோஷ்டிகளால் கொலை செய்யப்பட்டார்கள் என்பது தகவல்.

முஸ்லிம் மக்களைக் கொலைசெய்ததாகக் கூறப்படுவோர் குறித்து வித்தியாசமான விவரங்கள், வர்ணனைகள் தெரிவிக்கப்பட்டன. இராணுவச் சீருடை அணிந்தவர்கள் என்று ஓர் அறிக்கையிலும், முஸ்லிம்களைப் போல உடையும், தொப்பியும் அணிந்து வந்தவர்கள் என்று மற்றொரு அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டது

ஆண்டவன் சந்நிதானத்தில் வைத்து அடியார்களைக் கொல்வது பாவம். அப்பாவி மக்களை. நிராயுதபாணிகளை கொல்வது மனிதாபிமானமற்ற செயல்.

முஸ்லிம் மக்கள், அவர்கள் கிழக்கில் வாழ்ந்தாலும் வடக்கில் வாழ்ந்தாலும் தமிழர்களின் சகோதரர்கள். ஆண்டாண்டு காலமாக இரு சமுகங்களும் கூடப்பிறந்த சகோதரர்களாக வாழ்ந்தவர்கள்; வாழ்பவர்கள். மொழியால் இணைக்கப்பட்டவர்கள்.

எனவே முஸ்லிம்களின் படுகொலை தமிழர்களுக்கு ஏற்படும் இழப்புப் போன்றதே. அவர்களுக்கு மன வேதனை - கவலை - தருவதாகும்.

ஆகையால் காத்தான்குடிக் கொலைகள் கண்டிக்கப்பட வேண்டியவை.

எனினும் இந்தக் கொலைகளை பின்வரும் அரசியல் பின்னணிகளுடன் நோக்குவது அவசியம்: அதுவே பொருத்தமானதுமாகும்.

வடக்கும்-கிழக்கும் தமிழர் தாயகம் என்ற நிலைப்பாட்டைஉடைத்து, இரண்டையும் வெவ்வேறாக்குவதற்காக தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்களைத் தூண்டிவிட ஜே. ஆர். அரசு பல முஸ்லிம்-தமிழர் கலவரங்களைக் கிழக்கில் பின்னால் நின்றுநடத்தியது.

இப்போது நடக்கும் யுத்தத்திற்கு ஆயுதம் வாங்குவதற்கு, அரபு நாடுகளின் உதவியைப் பெறுவதற்கு— அவற்றிடம் இருந்தே ஆயுதங்களை வாங்குவதற்கு— அரசு ஆலாய்ப் பறக்கிறது. முஸ்லிம்களைத் தமிழர்கள் கொல்கிறார்கள் என்று அந்த நாடுகளுக்குக் காட்டி, ஆத்திர மூட்டினால் தனது இலக்கை இலகுவில் எட்டலாம் என்று அரசு நினைக்கலாம்.

அரசும் அரச படைகளும் தமது தமிழர் விரோத நடவடிக்கைகளைச் செய்விப்பதற்காக ஊர்காவற்படையில் தமக்கு ஆதரவான சில முஸ்லிம்களையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள்.

தமிழர்களுக்கு இந்தியா என்றால் முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான்; என்ற வேறுபாட்டை வளர்ப்பதற்காக அரச படைகளுக்கு பாகிஸ்தானில் பயிற்சி;பாகிஸ்தான் அதிகாரிகளை இங்கு வரவழைத்துப் பயிற்சி பெறுதல் ஆகிய திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இந்தப் பின்னணிகளுடன், காத்தான்குடிக் கொலைகளைச் செய்தவர்கள் பற்றிய வெவ்வேறு வர்ணனைகள் தெரிவிக்கப்பட்டிருப்பதையும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

# உப்பாறில் ஷெல் வீச்சு; பெண் பலி! 7 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 6

திருமலை - உப்பாறு கிராமத்தை நோக்கி நேற்று முன்தினம் இரவு 10-30 மணியளவில் ஏவப்பட்ட ஷெல் குண்டுகளினால் பெண் ஒருவர் உயிரிழந்தார். 7பேர் காயமடைந்தனர்.

கிண்ணியா, வானாறு, தம்பலகமம் ஆகிய பகுதிகளில் உள்ள முகாம்களிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களே உப்பாறு பகுதியில் விழுந்து வெடித்ததாகக்கூறப்பட்டது.

## தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 6

நேற்று முன்தினம் மாலையில் திருகோணமலை 10ஆம் கட்டை இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிய வருகிறது. [உ-9-5]

## வவுனியா சின்னக்குளத்தில் இரு இராணுவத்தினர் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 6

வவுனியா சின்னக்குளத்தில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன.

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார் என்றும்-

திருமலை மாவட்டம் பெரிய பாலம் என்ற இடத்தில் மூன்று சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் தெ விக்கப்பட்டது. [உ-எ]

## வற்றாப்பளை கண்ணகை ஆலயம் மீண்டும் சேதம்

வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் மீண்டும் ஒரு முறைகடந்தவெள்ளிக்கிழமை இடம்பெற்ற விமானத் தாக்குதலினால் சேதமடைந்தது.

விமானத்தைக் கண்டு ஆலயத்துக்குள் ஓடிய ஒருவர் பலத்த காயமம்அடைந்துமானிப்பாயில் உள்ளயாழ் போதனா வைத்தியசாலைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ம. செல்லையா என்றமுதியவரே காயமடைந்தவர் ஆவார். கோயிலின் கோபுரத்தைத் தவிர ஏனைய பகுதிகள் பெரும் சேதமடைந்து விட்டதாக அவர் தெரிவித்தார். (இ-10)

## பரவலாக பல இடங்களில் வீடுகள் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 6

யாழ். நகரில் சனிக்கிழமை நள்ளிரவு முதல் ஞாயிறு காலை வரை இடம்பெற்ற விமானக்குண்டுத் தாக்குதல்களில் பரவலாக நகரின் பல பகுதிகளிலும் வீடுகள் சேதம் அடைந்தன.

பருத்தித்துறை வீதியில் 6 வீடுகள் சேதம் அடைந்தன. இவற்றில் நான்கு வீடுகள் முற்றாகச் சேதம் அடைந்தன.

இலுப்பையடிச் சந்தியில் நான்கு வீடுகள் சேதம் அடைந்தன. இவற்றில் இரண்டு வீடுகள் முற்றாகச் சேதமுற்றன.

யாழ். ஆஸ்பத்திரி வீதி-முலவைச் சந்தியில் வீழ்ந்த குண்டினால் வீடு ஒன்று முற்றாகச் சேதமுற்றது. அருகில் இருந்த சில வீடுகளும் பாதிப்புற்றன.

நாவலர் வீதியில் 6 வீடுகள் சேதம் அடைந்தன- இவற்றில் இரு வீடுகள் முற்றாகச் சேதமாகின.

பலாலி வீதியில் இரு வீடுகள் சேதமுற்றன.

அத்தியடி, அம்பலவாணர் வீதியில் 5 வீடுகள் சேதமடைந்தன. இவற்றில் ஒரு வீடு முற்றாகச் சேதம். நால்வர் காயமுற்றனர். காளி கோவிலடியில் ஒரு ஸ்ருடியோவும், வீடு ஒன்றும் முற்றாகச் சேதமுற்றன.

நாவலர் வீதியில் ஒரு கல்வி நிலையமும் 6 வீடுகளும் சேதமுற்றன.

அரசடி வீதியில் தனியார் கல்வி நிலைய ஒழுங்கையில் விழுந்த குண்டினால் ஒரு வீடு முற்றாகச் சேதம் அடைந்தது. கார் ஒன்றும் சேதம் அடைந்தது. அருகில் இருந்த வீடுகள் சிறு சேதங்களுக்கு உள்ளாகின.

கடற்கரை வீதி, யாழ். 6 ஆம் குறுக்கு வீதி, அடப்பன் வீதி, குருநகர், புதுமை மாதா கிழக்கு, மேற்கு வீதிகள், பாலவுடையார் வீதி, சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதி, குருநகர் தண்ணீர்த் தாங்கி 1 ஆம் குறுக்கு வீதி ஆகியவற்றில் வீழ்ந்து வெடித்த குண்டுகளில் நூற்றுக்கும் அதிகமான வீடுகள சேதமடைந்தன. இருபத்தைந்துக்கும் மேலான கடைகள் உடைந்தன.

குருநகர் அரச மரக் கூட்டுத் தாபனமும் சேதமுற்றது.

குருநகர், ஐஸ் பிளாண்ட் வீதி, தண்ணீர்த் தாங்கி வீதி, கொண்டடி வீதி ஆகியவற்றில் வீழ்ந்து வெடிக்காத நிலையில் குண்டுகள் காணப்பட்டன. (இ-9-10-51)

## வாபஸ் ஆரம்பம்

பக்தாத், ஆக.6

குவைத் நாட்டில் இருந்து தனது துருப்புக்களை விலக்கும் பணியை ஈராக் நேற்று ஆரம்பித்தது.

கட்டம் கட்டமாக துருப்புக்களை வாபஸ் வாங்குவது ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக ஈராக் நேற்று ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு அறிவித்தது (இ-எ)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## தமிழர் தேசம் காப்பாய்!

தமிழ் கூறும் உலகின் முதற் தலைவனென்றும்
தமிழாகி நிற்கின்ற பொருள் நீ என்றும்
புலவோர்கள் உரைக்கின்றார் உண்மையென்னில்
புறப்படட்டும் உன் கைவேல் தமிழைக் காக்க!

தேவர்களைக் காத்தவன் நீ யென்றால் தமிழர்
தேசத்தைக் காப்பதற்குத் தயக்கம் ஏனோ?
பாவலர்கள் சொன்னதுவும் பொய்யோ முருகா
பார் போற்றும் தமிழ்க் கடவுள் நீயும் இலையோ?

— நெடுந்திவு லக்ஸ்மன் —

(இன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய 11 ஆம் திருவிழா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலங்குளத்தில் மோட்டார் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 6

மட்டக்களப்பு ஆலங்குளம் இராணுவ முகாம்மீது நேற்று முன்தினம்விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. (உ-9-5]

## பசியால் தற்கொலை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 6

மூன்று பிள்ளைகளின் தந்தையான கா.முனியாண்டி என்பவர் பசிக் கொடுமை தாங்க முடியாது மருந்து குடித்து தற்கொலை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி பாரதி புரத்தில் கடந்த வெள்ளியன்று இச் சம்பவம் நடைபெற்றதாகத் கூறப்பட்டது. (உ-5-9)

## ஓமந்தை---

[1 ஆம் பக்கத் தெக்டர்ச்சி]

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஜெசி, றோகான் ஆகிய இரண்டு போராளிகள் வீர மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்து. (உ-9-5)

## மரணித்த போராளி---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாறு:-

★ விக்ரம் [க. தவராசா- உடுத்துறை, தாளையடி]
★ எட்ரிக்ஸ் [சுகுமார்-பருத்தித்துறை]
★ அலீப் [வே. ஜெயபாஸ்கரன் -ரேவடி, வல்வெட்டித்துறை]
★ கருணாநிதி [தி. கருணாநிதி - தும்பளை, பருத்தித்துறை]
★ ஜேம்ஸ் [ச. எதிராஜ்- நெடியகாடு, வல்வெட்டித்துறை]
★ மோகன் [பா; பாலேந்திரன் - பருத்தித்துறை]
★ சுபேசன் [கே; ரஞ்சித்குமார் - வல்வெட்டித்துறை]
★ கெனடி [வே. விஜயகுமார் - யாக்கரை, கரவெட்டி]
★ நிஷாந்தன் [வி. செல்வகுமார் -அம்பனை, பருத்தித்துறை]
★ சரத்பாபு [க. அகிலேஸ்வரன் - கொக்குவில்]
★ லோஷன் [மு. சுரேஷ்- பருத்தித்துறை]
★ டயஸ் [சே. இராஜேந்திரகுமார் - இருபாலை]
★ சீலன் [அன்வர்-ஊறணி, வல்வெட்டித்துறை]
★ நிஷாந்தன் [செ. அன்பழகன் - ஆவரங்கால், புத்தூர்]
★ அனிபா [வ. உதயகாந்தன்-மட்டுவில், சாவகச்சேரி]
★ வசிட்டன் [ச. சுந்தரராஜா-புத்தூர் கிழக்கு]
★ புரட்சிமாறன் [இ. தேவசகாயம்-நவாலி, மானிப்பாய்]
★ சந்துரு [இ. திருமாறன்- மண்டான், கரணவாய்]
★ பிலிப்ஸ் [கே.ஜெயசெல்வம்- கடியவுலேன் எஸ்டேட், கொத்மலை]
★ நெல்ஸன் [இ. கெங்காதரன் - ஜெயந்திநகர், கிளிநொச்சி]
★ யசோ [கிருன்ராஜா- பம்பைமடு, வவுனியா]
★ பில்லா [ஏ. ஜேசுநாயசம் - வெற்றிலைக்கேணி]
★ ஜொனி [ஆறுகால்மடம்].

மகளிர்

★ சங்கீதா
★ அநுரா
★ மாதங்கி
★ மாதுரி. (உ-9-5)

## பாஷையூர்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றது.

சனிக்கிழமை நள்ளிரவு முதல் ஞாயிறு காலை வரை பொம்மர்களும், மற்றும் விமானங்களும் நூறுக்கும் மேற்பட்ட குண்டுகளை யாழ். நகரில் பொழிந்து தள்ளின.

கடைசியாக நடத்தப்பட்ட தாக்குதலே பாஷையூரில் ஐவரின் உயிரைப் பலி எடுத்தது.

கிறிஸ்ரி செல்வநாயகம் விஜிதா (வயது 10), ஜேமிஸ் நிக்ஸன் (வயது 8), யேசுதாஸ் சுபாஜினி (வயது 7), யோகம் வனிதா (வயது 10), தம்பித்துரை இராசாத்தி (வயது 53) ஆகியோரே மரணம் அடைந்தவர்கள் ஆவர்.

இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த சிலர் திருச் சிலுவைக் கன்னியர் சுகநல நிலையத்தில் முதலுதவிச் சிகிச்சை பெற்று மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்திய சாலைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-10-51)

## சாவகச்சேரியில் ஹெலித் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 6

நேற்றுக் காலையில் சாவகச்சேரியை அண்டிய பகுதிகள் மீது ஹெலிக்கொப்டர் ஒன்றில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. (உ-9)

## யாழ்.கோட்டை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதலை நடத்தின.

விமானத் தாக்குதல் அதிகாலை 12.30 மணிமுதல் காலை 8.30 மணிவரை சுமார் எட்டு மணிநேரம் நீடித்தது.

பொம்மர்களும், அவ்ரோக்களும்,ஹெலிக்கொப்டர்களும் மாறிமாறி நகரை வட்டமிட்டு குண்டுகளைப் பொழிந்ததால் யாழ். நகரம் அதிர்ந்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் கோட்டைக்குள் இருந்த படையினருக்கு பேரழிவு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்தத் தாக்குதலினால் கோட்டைக்குள் இருந்த இரண்டு பொலீஸார் உயிரிழந்தனர்; ஆறு பேர் காயமுற்றனர் என்று மட்டுமே இலங்கை அரசு தரப்புச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

நேற்று நண்பகலும் யாழ். கோட்டை முகாம் பகுதி மீது ஹெலிக்கொப்டர்கள் வட்டமிட்டன.

நேற்று நள்ளிரவு வரை நகரத்தின் மீது வட்டமிட்ட ஹெலிக்கொப்டர்களும், பொம்மர்களும் நகரின் பல பகுதிகள் மீது தாக்குதலை நடத்தின.

நேற்றிரவு இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விவரம் இச் செய்தி அச்சுக்குப்போகும் வரை தெரியவரவில்லை.

நேற்று காரைநகர், நயினாதீவு கடற்படை முகாம்களின் மீதும் பெரும் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9-5)



குருநகர்ல் சேதமுற்ற மேலும் சில வீடுகள்

# அரபு நாடுகளிடமிருந்து நிதி, ஆயுதங்கள் பெற
# அரசு நடத்திய சதியே காத்தான்குடி சம்பவம்

## நிலையை விளக்கி புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 6

அரபு நாடுகளிடமிருந்து நிதி, ஆயுதங்களைப் பெறுவதற்காக ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட சதி நாடகம் தான் காத்தான் குடியில் முஸ்லிம்கள் கொலைச் சம்பவம்.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

''காத்தான்குடியில் முஸ்லிம்களின் கொலை அரசின் திட்டமிட்ட சதி'' என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மையில் முஸ்லிம் நாடுகளுக்கு ஆயுதம் வாங்க ஸ்ரீ லங்கா அரசு தனது பாதுகாப்புத் துணை அமைச்சரை அனுப்பியது

தமிழீழத்திலும் இலங்கைத் தீவின் தென்பகுதியிலும் அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன.

இதனால் பல நாடுகள் சிங்கள அரசுக்கு ஆயுதம் வழங்க மறுத்துவருகின்றன

அரபு நாடுகளிடம் நிதியும் ஆயுதமும் பெற சிங்கள அரசு பல நாடகங்களை ஆடுகிறது.

முதலில் இலங்கையில் இருந்த ஸ்ரேலிய நலன்புரி அமைப்பை மூடியது.

இப்போது திட்டமிட்டு முஸ்லிம் மக்களைக்கொலைசெய்து விட்டு பழியை தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சுமத்துகிறது,

''விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்களைக் கொல்கின்றார்கள்; அவர்களை எதிர்த்துப் போராட ஆயுதம் வேண்டும்'' என அரபு நாடுகளிடம் கூறி அந்த நாடுகளிடம் இருந்து ஆயுதங்களைப் பெறலாம் என சிங்கள அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.

தமிழ் முஸ்லிம் மக்களைப் பிரித்து தமிழ் பேசும் மக்களை அளிக்கவும் சிங்கள அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது

சிங்கள அரசின் இத்திட்டத்துக்கு முஸ்லிம் மக்களின் தலைவர்கள் எனத் தம்மைக் கூறிக் கொண்டு பதவிக்காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் சிங்கள அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் சிலர் துணை போகின்றார்கள்.

இஸ்ரேலின் மொஸாட் அமைப்பை ஸ்ரீலங்காவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அழைத்த போது — 1985 ஜனவரி 21 ஆம் திகதி—மொஸாட்டின் முகவர் திரு. ஆவ்ரா கூகாம் ஜோஃப் உடன் பேச்சு வார்த்தை நடத்தியவர் இன்றைய ஸ்ரீலங்கா நாடாளுமன்றின் சபாநாயகர் எம். எச். முகம்மது

இவர் இன்று விடுதலைப் புலிகளுக்கு இஸ்ரேல் உதவி செய்கின்றது என்று கூறி வருகிறார்.

முஸ்லிம் மக்கள் திட்டமிட்டு சிங்கள மக்களால் கொல்லப்பட்டு வருகின்றனர். தமது மண்ணில் இருந்து அவர்கள் விரட்டப்படுகின்றார்கள். இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்போ அல்லது அரசில் இருக்கும் எந்த முஸ்லிம் அமைச்சர்களோ குரல் கொடுத்தது கிடையாது-

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தை சிங்கள அரசு சிங்கள மாவட்டமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அத்துடன் அங்கு பெருமளவில் சிங்களவரை குடியேற்றியும் வருகிறது. அங்குள்ள அரச அதிபர் கூட ஒரு சிங்களவர்தான்.

இப்படி செயற்படும் அரசு இன்று தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகத்தான் நடத்தும் இனப் படுகொலையை நியாயப்படுத்தும் குழுவுக்கு தலைவராக ஒரு சிங்களவரை அனுப்பாது முஸ்லிம்மான எம்.எச். முகம்மதுவை அனுப்புகிறது.

சிங்கள அரசானது முஸ்லிம் ஊர்காவல் படையைக் கொண்டு தமிழர்களைக் கொல்கின்றது; தனது கூலிப் படையைக்கொண்டு முஸ்லிம்களைக் கொல்கிறது.

இதன் மூலம் தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரித்து; அழிக்க முயல்கிறது.

முஸ்லிம்களின் கொலையை விடுதலைப் புலிகளின் மீது சுமத்துவதன் மூலமும்-

தனது இனப்படுகொலையை சில துரோகிகளின் துணையோடு நியாயப்படுத்துவதன் மூலமும்-

அரபு நாடுகளிடமிருந்து நிதியையும் ஆயுதங்களையும் பெற நினைக்கிறது.

சிங்கள அரசின் இந்தத் திட்டமிட்ட சதியை தமிழ், முஸ்லிம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமக்கும் காத்தான்குடியில் நடைபெற்ற கொலைக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

—என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-5-9)

# நேற்று காயம் அடைந்தோர்

யாழ்ப்பாணம், ஆக. 6

சனிக்கிழமை நள்ளிரவு முதல் ஞாயிறு காலை 9 மணி வரை யாழ். நகரில் இடம் பெற்ற விமானத் தாக்குதலில் காயம் அடைந்து மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் சேர்க்கப்பட்டோர் விபரம்:-

கனிசியஸ் சரோஜினி (வயது 13), எஸ் மரியநாயகி(வயது 47), எஸ். சோபியா (வயது 17), மரியாம்பிள்ளை கொஞ்சாலிஸ் (வயது 45), கொஞ்சாலிஸ் இராசராணி (வயது 40), லே. சலோசியஸ் (வயது 45), கே. கனகசபாபதி(வயது 46),கே,வேலுப்பிள்ளை(வயது 61), ஏ. ஜுட் (வயது 20)

இவர்கள் அனைவரும் குருநகரைச் சேர்ந்தவர்கள்.

அதே சமயம் பாஷையூர் புனித மாஸிர் வித்தியாலய அகதிமுகாமில் நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த புஷ்பராணி அருளம்மா (வயது 40) கவலைக்கிடமான நிலையில் திருச்சிலுவை கன்னியர் சுகநலநிலையத்தில் சிகிச்சை பெற்றுவருகிறார். (இ-10)

# கோட்டை முகாம் எப்படியும் புலிகள் வசம் வீழும்!

## டாக்டர் அன்ரன் பாலசிங்கம் நம்பிக்கை

கொழும்பு, ஆக 6

யாழ் கோட்டை இராணுவ முகாம் அடுத்துவரும் வாரங்களில் எப்படியேனும் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ச்சியடையும்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் நம்பிக்கை வெளியிட்டதாக பி பி. ஸி நேற்றிரவு அறிவித்தது.

பி. பி. ஸி செய்தியாளர் கிறிஸ்தோபர்மொரிஸ் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துவிட்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பினார்.

தாம் யாழ்ப்பாணத்தில் நின்றபோது டாக்டர் பாலசிங்கம் தம்மிடம் இவ்வாறு கூறியதாக அவர் தெரிவித்தார்,

யாழ் நகரப்பகுதியை இராணுவ நடவடிக்கைத்தவிர்ப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தும் அரசாங்கத்தின் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது என டாக்டர் பாலசிங்கம் கூறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை அரசுப் படைகளின் விமானத் தாக்குதல்களினால் யாழ்ப்பாண நகரம் அழிந்து போயிருப்பதாகவும் கிறிஸ்தோபர் மொறிஸ் தமது செய்தியில் தெரிவித்திருக்கிறார். [உ-எ]

# வடக்கு, கிழக்கு மாணவர்களுக்கு
# விசேட ஜீ. சி. ஈ. (உயர்தர) பரீட்சை

## ஜனாதிபதி பிரேமதாஸா உத்தரவு

கொழும்பு, ஆக. 6

எதிர்வரும் பத்தாம் திகதி ஆரம்பமாக உள்ள ஜீ.சி ஈ உயர்தரப்பரீட்சைக்கு தோற்றமுடியாத நிலையில் உள்ள வடக்கு,கிழக்கு மாகாண பரீட்சார்த்திகளுக்கு என விசேட ஜீ.சி.ஈ உயர்தர பரீட்சை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சீரற்ற நிலைமை காரணமாக ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் தோற்ற முடியாத நிலையில் இருப்பது ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதைத்தொடர்ந்து ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாண பரீட்சார்த்திகள் இலங்கையில் ஏனைய பரீட்சை நிலையங்களில் ஜீ சி ஈ உயர்தரப்பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பிக்கலாம் என்றும்-

தவிர்க்கமுடியாத காரணங்களால் அப்பரீட்சைக்குதோற்றமுடியாதவர்களுக்காக விசேட ஜீ சி.ஈ உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

# தமிழக மீனவர் 15 பேரை கடற்படை கடத்தியது!

சென்னை, ஆக, 6

தமிழகத்தைச் சேர்ந்த 15 மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் நடுக்கடலில் வைத்துக் கடத்திச் சென்றிருப்பதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

இராமேஸ்வரத்தில் இருந்து படகு ஒன்றில் புறப்பட்ட எட்டு மீனவர்கள் ஆழ்கடலில் வைத்து கைதுசெய்யப்பட்டதாகவும் -

தூத்துக்குடியில் இருந்து கடந்த 28ஆம் திகதி மின் விசைப்படகில் சென்ற வேறு ஏழு மீனவர்களையும் ஸ்ரீலங்கா படையினர் பிடித்துச் சென்றதாகவும் -

இவர்கள் அனைவரும் தற்போது கொழும்புக்கு அருகே பொலீஸ் நிலையம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக செய்தி கிடைத்திருப்பதாகவும் சென்னைச் செய்திகள் மேலும்தெரிவித்தன. [உ)

## நெல்லியடியில் விழுந்த ஷெல்

யாழ்ப்பாணம், ஆக. 6

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் சில நேற்று முன்தினம் இரவு வடமராட்சி பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக அறிய வந்தது.

ஷெல் குண்டுகளில் சில நெல்லியடி - கேணியடி பகுதிகளிலும் வீழ்ந்தன. இதனால் வீடு ஒன்று சேதமடைந்ததாகத் தெரியவந்தது. (உ-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org